IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:34/2013

**DEP OF WITNESS:** DW2 NAME: Chinappan Date: 01-08-2022

**குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை. 7ம் பிரதிவாதி அர்ச்சனா அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 7ம் பிரதிவாதியின் தந்தை எனது நண்பர், எனக்கு எழுத படிக்க தெரியாது. எனது முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் கூறியது தான் வழக்கறிஞர் தாக்கல் செய்தார். வாதிக்கும் பிரதிவாதிக்கும் சொத்து சம்பந்தமான பிரச்சனை என்னவென்றால் தரணி அம்மாளிக்கு வழக்கு சொத்தில் 25 செண்ட் நிலம் உரிமை உள்ளதாக வழக்குதாக்கல் செய்துள்ளார். அந்த விவரம் எனக்கு தெரியும். வாதி தரணியம்மாளுக்கு யார் கிரயம் செய்து தந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு தாவா சொத்தை ரங்கநாதன் என்பவர் அனுபவித்த சொத்தை அவரது மகள் 1ம் பிரதிவாதி கீதாக்கு எழுதிவைத்தார் மேலும் அந்த விவரம் எனக்கு தெரியும். எப்பொழுது எழுதி வைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ரங்கநாத முதலியார் வாதிக்கு கிரயம் கொடுத்த சொத்தின் மீதி சொத்தை 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன விவரம் எனக்கு தெரியும் என்றாலும் இவ்வழக்கிற்காக தெரியாது என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரங்கநாத முதலியார் மகள் தான் வாதி. இவ்வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. சொத்தின் செக்பந்தி விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்தின் மேற்கு பக்கம் மகேந்திரனின் மனைவயின் நிலம் உள்ளது. தெற்கு பக்கம் ஜெயகுமாரின் நிலம் உள்ளது. வடக்கு பக்கம் கமலாபுரம் கிராமம் உள்ளது. கிழக்கு பக்கம் சாலை உள்ளது. மேற்சொன்ன விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றும் மேற்சொன்ன செக்பந்தி அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. முதல் பிரமாண வாக்குமூலத்தில் ரங்கநாதமுதலியார் 1ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த நிலத்தை 2ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்தார். எப்பொழுது எழுதிவைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது தேதி மற்றும்மாதம் தெரியாது. பத்திர எண் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி ஜெயகுமாருக்கு பொது அதிகாரம் எழுதிவைத்தார். தேதி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் மட்டும் எழுதிவைத்தார். அதன்பிறகு 3ம் பிரதிவாதி ஜெயகுமார் சொத்துக்களில் பல லட்ச ரூபாய் செலவு செய்து நிலங்களை சமன்செய்தார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதுபோல் 3ம் பிரதிவாதி பொது அதிகார பத்திரம் எழுதிகொடுத்ததை வைத்து செலவு செய்ய முடியாது என்றால் நான் இவ்வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் 3ம் பிரதிவாதி ஜெயகுமாரின் நிலங்களை விற்கக்கூடாது என்று தடைஉத்தரவு பிறப்பித்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி ஜெயகுமார் தாவா சொத்தில் எத்தனை

மனைபிரிவு போட்டுள்ளார் என்றால் 20 மனைபிரிவுக்கு மேல் போட்டுள்ளார். தாவா சொத்துடன் சேர்த்து மற்றொரு சொத்திலும் இணைந்து மனை பிரிவு போட்டுள்ளார். மற்றொரு சொத்து மகேந்திரனின் மனைவியின் நிலத்தில் மனை பிரிவு போட்டுள்ளார். மகேந்திரனின் மனைவியின் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார். ரங்கநாத முதலியார் 1ம் பிரதிவாதிக்கு நிலத்தை எழுதிவைத்தார். அவர் 2ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்தார். 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதி இவ்வழக்கை நடத்துகிறார்களா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் உரிமையாளர் 2ம் பிரதிவாதி தாராபாய் என்றாலும் அவரே இவ்வழக்கை நடத்தவிரும்பவில்லை என்றாலும் 3ம் பிரதிவாதி வாரிசுகளான 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எந்த ஒரு தார்மீக உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு இந்த சொத்தில் உரிமை உள்ளதால் 1ம் பிரதிவாதியும் 2ம் பிரதிவாதியும் இவ்வழக்கை நடத்த விருப்பமில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி 2 முதல் 3 ஆண்டுகளுக்கு முன்பே காலமாகிவிட்டார். பொது அதிகார பத்திரம் கொடுத்தவரோ அல்லது எழுதி வாங்கியவரோ இறந்துவிட்டால் அநத சொத்தின் உரிமை அவர்களிடமிருந்து போய்விடும் என்பதால் இவ்வழக்கை நடத்த அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மனைபிரிவுகள் விற்பனை செய்தது நானும் ஒரு மனைபிரிவு வாங்கியுள்ளேன். மற்றொருவருக்கும் மனைபுரிவை வாங்கி கொடுத்துள்ளேன். மனைபிரிவுகளை மற்றவருக்கு வாங்க கொடுக்க முயறசிசெய்தேன் என்றாலும் பிரதிவாதி 9 முதல் 11 வரை உள்ளவர்களுக்கு உதவுவதற்காக மனை பிரிவை வாங்கி கொடுத்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரியாது என்றாலும் வழக்கு சொத்தின் விவரம் எனக்கு தெரியாது என்றாலும் 9 முதல் 11 பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொது அதிகாரம் பெற்ற 3ம் பிரதிவாதி இறந்துவிட்டால் அந்த சொத்தின் உரிமை அவர்களிடமிருந்து போய்விடும் என்பதால் இவ்வழக்கை நடத்த 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.RAJANANDHIVARMASIVA,
DISTRICT MUNSIF